(Chapter XXII code of Crl. Procedure)
In the Court of III Addl. District and Sessions Judge,
Tirupattur, Vlr. Dt.

| | | |
|---|---|---|
| **Civil Cases** | : | **MCOP.1/2018** |
| Deposition of witness of | : | **P.W.3** |
| Name | : | **குமார் - சிறப்பு உதவி ஆய்வாளர்** |
| Father's Name | : | மணி |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 29.11.2018 சாட்சி ஆஜர் சத்திய பிரமாணம் பெறப்பட்டு விசாரிக்க அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலூர், அரியூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததால், ஆஜராகியுள்ளேன். குற்ற எண்.217/2017 வழக்கு சம்மந்தமான இறுதி அறிக்கை எடுத்து வந்துள்ளேனா என்றால், எடுத்து வந்துள்ளேன். அதன் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ**13. மேற்படி வழக்கில் இருசக்கர வாகன ஓட்டுநர் ஹரீஷ்குமார் என்பவர்மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஹரீஷ்குமார்தான் இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்து ஏற்படுத்தியதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை :**

அரியூர் காவல் நிலையத்தில் கடந்த 6 மாத காலமாக நான் பணிபுரிந்து வருகிறேன். விபத்து காலத்தில் நான் அரியூர் காவல் நிலையத்தில் பணிபுரியவில்லை, சத்துவாச்சாரி காவல்

நிலையத்தில் பணிபுரிந்தேன். விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு நேரில் தெரியாது. காவல் ஆய்வாளர் யாரையெல்லாம் விசாரித்தார் என்று எனக்கு நேரில் தெரியாது. குற்றவியல் நீதிமன்றத்தில் மேற்படி இறுதி அறிக்கையின்மீதான வழக்கு என்ன ஆனது என்றால், தெரியாது.

**மறு விசாரணை : இல்லை.**